# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110—ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 1.6.2018

## பள்ளிக் கல்வித்துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளித்து வந்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு தொடர்ந்து ஏழை எளிய மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித் துறை சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி அனைத்துப் பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் 2,448 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 48 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**2.** அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் அனைத்துப் பாடங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக 2,283 திறன் வகுப்பறைகள் (Smart Classes) 42 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**3.** நடப்பு கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ள புதிய பாடத்திட்டத்தினை மாணவர்களுக்கு சீரிய முறையில் பயிற்றுவிக்க ஏதுவாக,

அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடை பயிற்சி வழங்கப்படும். மேலும், தலைமை ஆசிரியர்கள் அவர்களது தலைமைப் பண்பினை மேம்படுத்தி கொள்வதற்காக பயிற்சியும், ஆய்வு அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், தேசிய ஆசிரியர் தகவுக்கான (National Teacher Portal) கட்டகங்கள் (Modules) உள்ளீடு செய்தல் சார்ந்த பயிற்சியும் மற்றும் இதர பயிற்சிகளுக்காக 35 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

4. மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம் 32 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கல்வி கற்பிக்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும், வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, இப்பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்படும் விதத்தில், ஒரு பள்ளிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 16 கோடி ரூபாய் செலவில் மாதிரி பள்ளிகள் உருவாக்கப்படும்.

5. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கான திறன் அட்டை வழங்கும் முன்னோடி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திறன் அட்டையில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் ஆதார் எண் இணைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட திறன் அட்டையாக நடப்பு கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கும் 11 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**